புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

==================================================================

# சூழலியல் நோக்கில் ஐம்பேரியற்கை புதினம்: இயற்கையோடு இயைந்த வாழ்வு

==================================================================

**ஆய்வாளர்**

*அஜீத் குமார்.மு*

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி*

*தாம்பரம்-59.*

==================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்பு சுற்றுச்சூழல் காரணிகளைப்(இயற்கை வளம், உயிரினங்கள் முதலியவை) பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புணர்வு இந்திய அரசிடமும் மக்களிடமும் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது. அதன் தாக்கத்தைத் தமிழ்ப் புதின இலக்கியங்களிலும் காணலாம். கடந்த எழுபத்து ஐந்து ஆண்டுகளில் சுற்றுச்சூழல் மாசுபடுதலை மையமாகக் கொண்ட புதினங்கள் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவற்றுள் ஐம்பேரியற்கை எனும் புதினம் இக்கட்டுரைக்கு முதன்மை ஆதாரமாய் அமைகிறது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் இன்றியமையாமையை உணர்த்தும் வகையில் ஐம்பேரியற்கை அமைப்பெற்றுள்ளது. தற்கால மக்கள் சமூகம் இயற்கைச் சூழலிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கும் தன்மையைக் கொண்டதாய் விளக்குகின்றது. ஆனால் இவ்வுலகில் வாழ்கின்ற உயிர்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாய் விளங்குகின்றன. இவ்வுலக உயர்களின் சமநிலைத் தவறினால் மனிதர்கள் இவ்வுலகில் உயர்வாழ முடியாது. மனிதர்கள் தங்களது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எண்ணற்ற வழிமுறைகளைக் கையாள்கிறார்கள். ஆறறிவைக் கொண்டு மனிதர்கள் இயற்கை சூழலையும் இயற்கை சூழலைச் சார்ந்து வாழும் உயிரினங்களையும் அழிக்கின்றனர். இதுபோன்ற சுற்றுச்சூழலைப் பாதிக்கும் / உயிரினங்களின் சமநிலையைச் சீர்குலைக்கும் காரணிகளை ஒன்றன்பின் ஒன்றாக, ஐம்பேரியற்கை புதினமானது தொடக்கம் முதல் இறுதி வரை பதிவிடுகிறது. அவற்றை விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

***கலைச்சொற்கள்:*** *ஐம்பேரியற்கை, புதினம், சூழலியல், ஐம்பூதம், கட்டுமானப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், உணவுச் சங்கிலி முறை, வேளாண் புரட்சிகள்.*

*முன்னுரை*

*சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை தமிழ் மொழியில் இலக்கியங்கள் பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளன. இலக்கியங்கள் அடைந்த அனைத்து பரிணாமங்களையும் ஆராய முற்பட்டால், அதற்குத் தீர்வாக இலக்கியம் உருவான காலச்சூழல் அடிப்படையாய் அமையும் என்பது மறுக்க முடியாத ஒன்றாயுள்ளது. சூழலை(காலம் மற்றும் இடம்) மையமாகக் கொண்டுதான் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. இலக்கியம் அது உருபெறும் சமூகத்தின் பின்புலத்தைப் பிரதிபலிப்பதாய் அமைகிறது. பண்பட்ட ஒரு சமூகத்தின் வளர்ச்சியைக் காண, அச்சமூகத்தில் உருபெறும் இலக்கியக் கூறுகளை ஆராய்வது போதுமானது என்பது இலக்கிய அறிஞர்களால் பரவலாகக் கூறப்படும் கருத்தாகும். அவ்வகையில் இக்கட்டுரை, ஐம்பேரியற்கை புதினம் வெளிப்படுத்தும் இயற்கையின் இயல்புகளையும் அவற்றிற்கு மனிதர்களால் அளிக்கப்படும் இடையூறுகள் குறித்தும் விளக்குவதாக அமைகிறது.*

*கருதுகோள்*

*காலம் காலமாகச் சுற்றுச்சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையேயான உறவுகளைத் தமிழிலக்கியங்களின் பதிவுகள் வழி அறிய முடிகிறது. அத்தகைய கூறுகளை ஆராய்வதில் துணைப்புரிவதாக இலக்கியங்களின் பொருண்மைகளும் அமைகின்றன. அதனை ஐம்பேரியற்கை புதினத்தின் வழி ஆய்கிறது இக்கட்டுரை.*

***ஆய்வு அணுகுமுறை***

*இக்கட்டுரையில் ஐம்பேரியற்கை புதினம் வெளிப்படுத்தும் ஐம்பூதங்களின் இன்றியமையாமையை உணர்த்தவும், இயற்கை சூழலிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கும் மக்களின் தன்மையை எடுத்துரைக்கவும், இவ்வுலகில் வாழ்கின்ற உயிரினங்களுக்கிடையேயான தொடர்புகளை விளக்கவும், மனிதர்கள் மேற்கொள்ளும் உற்பத்தி முறைகள் பிற உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படுத்தும் பாதிப்புகளை விவரிக்கவும் விளக்கமுறை அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது.*

***இலக்கியமும் சூழலியலும்***

*சூழலியலும் இலக்கியவியலும் இரு வேறுபட்ட ஆய்வுத்துறைகளாகும். சூழலியல் என்பது உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கும் இடையேயான தொடர்புகளைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள உதவும் அறிவியல் துறையாகும்(சுற்றுச்சூழல் கல்வி, 2005:1). உலகிலுள்ள உயிருள்ள காரணிகளான(Biotic Components) தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள் போன்றவைகளும், உயிரற்ற காரணிகளான(Abiotic Component) நீர், நிலம், காற்று ஆகிய அடிப்படையான ஆதாரங்களும் மற்றும் இயற்கையின் ஆற்றல்களான ஒலி, புவி ஈர்ப்பு போன்றவற்றால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்படுகிறது(சுற்றுச்சூழல் கல்வி, 2005:1). அதோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலும் உயிரினங்களின் செயல்பாடுகளினால் பாதிக்கப்படுகிறது. இதுவே உயிரினங்களும், சுற்றுச்சூழலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பதற்குச் சான்றாய் அமைகின்றது.*

*சூழலியல் என்பது உயிர்வாழ்க்கையின் பரவல் பற்றியும், உயிரினங்களுக்கும் இயற்கை சூழலுக்கும் இடையேயான உறவுகளையும் அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் ஒரு துறையாகும். சூழலியல் எனும் சொல்லை ஆங்கிலத்தில் ஈக்காலஜி (Ecology) என மொழிவர். இச்சொல்லினை முதன்முதலில் பயன்படுத்தி விளக்கியவர் எர்னஸ்ட் ஹேக்கல் (Ernst Haechel). இவர் ஜெர்மன் நாட்டை சேர்ந்தவர் ஆவர்(சுற்றுச்சூழல் கல்வி, 2005:2). இவரின் கருத்துப்படி,*

1. *ஒரு உயிரினத்தை அதன் சுற்றுச்சூழலிலிருந்து பிரிக்க முடியாது.*
2. *இவ்விரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது.*
3. *எந்த ஒரு உயிரினத்தின் செயல்பாடும், அதன் சூழ்நிலை மண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது(சுற்றுச்சூழல் கல்வி, 2019:6).*

*சுற்றுச்சூழல் காரணிகளால் உயிரினங்களின் வளர்ச்சி, இனப்பெருக்கம், இடப்பெயர்ச்சி, பரவுதல் போன்ற பாதிப்புகள் நிர்ணயிக்கப்படுவதோடு அவற்றிற்கிடையே வேறு பல தொடர்புகளும் காணப்படுவதால், இந்த அறிவியல் துறையைச் சுற்றுச்சூழலின் உயிரியல் (Environmental Biology) என்றும் அழைப்பர்(சுற்றுச்சூழல் கல்வி, 2005:1).*

*சூழலியல் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களையும் மையப்படுத்துவதாகவுள்ளது. அதன் அடிப்படையில் சூழலியலை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அவற்றிற்கிடையேயான உறவுகளை விவரிக்கலாம். அவை தனி உயிரி சூழலியல், தொகுப்பு உயிரின சூழலியல், வாழிட சூழலியல் ஆகியன.*

*தனி உயிரி சூழலியல் இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் குறித்தும் அவற்றின் வாழ்க்கைச்சூழல் குறித்தும் விளக்குகிறது. மேலும் அவற்றிற்கும் பிற உயிரினங்களுக்குமிடையேயுள்ள ஒற்றுமைகளையும் விவரிக்கிறது.*

*தொகுப்பு உயிரின சூழலியலானது தனித்த உயிரிகள் கூட்டமாய் பெருகும் சூழலையும் அவற்றிற்கு இடையே உள்ள சங்கிலிப் பிணைப்பையும் விளக்குவதாய் அமைகிறது. இவ்வுலகில் எந்த ஒரு உயிரினமும் தனித்து வாழ்ந்திட முடிவதில்லை.*

*இவ்வுலகில் வாழும் உயிரினங்களை(மனிதனைத் தவிர்த்து), அவை உண்ணும் உணவுகளை மையப்படுத்தி எளிதில் வகைப்படுத்தலாம். அவை தாவர உண்ணிகள், மாமிச உண்ணிகள் ஆகியன.இவ்விரண்டு வகை உயிரிகள் மேற்கொள்ளும் உணவு சங்கிலிப்பிணைப்புச் சூழலை விளக்குவதாகச் சூழல் கூட்மைப்பு சூழலியலுள்ளது.*

*வாழிட சூழலியல்தான் இம்மூன்று பிரிவுகளில் முதன்மையானதாகும். உயிர்கள் வாழ தகுந்த சூழல் இன்னதென வரையறுக்கும் பிரிவு இது. பூமியில் உயிர்கள் வாழ அடிப்படை ஆதாரங்களாக நிலம், நீர், காற்று ஆகியன விளங்குகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு உயிர்கள் வாழத்தகுந்த இடங்களை இரண்டாகப் பிரிக்கலாம். அவை நீர் வாழிடங்கள், நில வாழிடங்கள் என்பன.*

*வாழ்விடத்தை மையமாகக் கொண்டு அந்தந்தச் சூழலுக்கேற்ப வெவ்வேறு தன்மைகளைக் கொண்ட உயிரினங்கள் தோன்றவும் அழியவும் நேரிடுகின்றன. மனிதனும் இயற்கைச் சூழலின் ஒரு உயிர்க்காரணி என்றாலும், மனிதன் பிற உயிர்க் காரணிகளிலிருந்து சற்று மாறுபட்டுள்ளான். மனிதன் சூழலுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றலோடு விளங்குகிறான். இத்தகைய ஆற்றலினை மனிதன் இயல்பாகவே பெற்றிருப்பதில்லை. சூழலின் காரணிகளான பிற உயிரிகளிடமிருந்து கற்றுக் கொண்டு மனிதன் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறான். பறவைகளும் விலங்குகளும் பருவக்கால மாற்றங்கள் நிகழும்போது, அவைகள் உயிர்வாழ வாழ்வாதாரங்களைத் தேடி இடம்பெயர்வதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.*

*சூழலியலின் முதன்மை காரணிகளின் வரிசையில் உயிரற்ற காரணிகளான நிலம், நீர், காற்று ஆகியன உள்ளன. இரண்டாம் நிலை காரணிகளாக உயிருள்ள காரணிகளான ஊர்வன, நீந்துவன, பறப்பன, நடப்பன ஆகியன உள்ளன. சூழலியல் காரணிகளுள் மனிதன் இரண்டாம் நிலை காரணிகளின் பட்டியலில் இடம் பெறுகிறான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் மனிதனின் தகவமைத்துக் கொள்ளும் தன்மையானது சூழலியலின் முதல் மற்றும் இரண்டாம் நிலை காரணிகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவுள்ளது. இதில் மனிதனும் பாதிப்புக்குட்படுகிறான் என்பது மறுக்கவியலாத உண்மை.*

*சூழலியல் எனும் அறிவியல் துறை தோன்ற காரணம் மனிதன்தான். இது மனிதனை மிகைப்படுத்தும் வாக்கியமல்ல. இயற்கைச் சூழல் உயிர்கள் வாழும் தகுதியை இழந்து வருவதால், அதனை மீட்டெடுக்கும் நோக்கத்தில் சூழலியல் எனும் துறை தோற்றம் பெற்றது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலான கருத்துகள் நவீன இலக்கியங்களில் மிகுதியாகப் பதிவு செய்யப்படுகின்றன.*

மனிதனின் தேவை அதிகரிக்க அதிகரிக்க சூழலியலின் பிற காரணிகளிடமிருந்து தனக்குத் தேவையானதை ஆக்கிரமித்துக் கொள்கிறான். அதுமட்டுமின்றி, அதற்றவாறு வாழ தன்னைத் தகவமைத்துக் கொள்கிறான். தன்னைத் தகவமைப்பதுடன் நிறுத்திவிடாமல், தன்னைச் சுற்றியுள்ள சூழலையும் அவன் வாழத் தகுந்த வகையில் தகவமைக்க முயற்சிக்கின்றான். சூழலியலின் ஒரு காரணியாக மனிதன் இருப்பினும், சூழலியல் காரணிகளின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் முக்கியப் பங்கு வகிப்பவனாக மனிதன் திகழ்கின்றான்.

சூழலியல் கூறுகளைக் கொண்டு இலக்கியத்தை அணுகும் போது, இயற்கையை மட்டும் எல்லையாகக் கொண்டு சுருக்கிவிட முடியாததாய் அமைகின்றது. இயற்கையின் படைப்புகளில் மனிதனும் ஒன்றாயுள்ளான் என்பதனை மறுக்கவியலாது. மனிதன் படைத்த எண்ணற்ற படைப்புகளில் இலக்கியமும் ஒன்றாகும். அந்த வரிசையின் கீழ்தான் பல்வேறு அறிவியல் கோட்பாடுகளும் அமைகின்றன. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து மேலை நாட்டு அறிஞர்கள் பலரால் பல கோட்பாடுகள் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் சூழலியல்.

**ஐம்பேரியற்கையும் மாற்கும்**

நல்லூர், அரசு அளிக்கும் விலையில்லா பொருள்களையும் பிற நலத் திட்டங்களையும் ஏற்க மறுக்கும் மக்களைக் கொண்ட கிராமமாகும். இக்கிராமம் மூன்று தெருக்களையுடைய நத்தம் புறம்போக்கு நிலத்தையும், ஐம்பது ஏக்கர் விவசாய நிலத்தையும், மந்தை புறம்போக்கு நிலத்தையும், மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தையும், பூங்கா புறம்போக்கு நிலத்தையும் கொண்டதாகும். இவைகள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் வரிக்காகத் தலித்துகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலமாகும். ஐந்து குடும்பங்களுக்கு அளிக்கப்பட்ட நல்லூர் கிராமத்தின் நிலமானது, தற்போது கூட்டுறவு முறையில் அவர்களின் வழி வந்த ஐம்பது குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக இணைந்து வாழத் தூண்டுகோலாய் அமைந்துள்ளது.

அழகேசன் நவீனம் என்ற தொண்டு நிறுவனத்தை வழிநடத்துபவர். மாவட்ட ஆட்சியர் ஜெயகுமாரைப் பெரும் படிப்பு படித்தவர் என்ற அடையாளத்தில் நல்லூர் கிராமத்திற்கு அழைத்து வருகிறார் அழகேசன். ஆட்சியர், அழகேசன் கூறியதை நினைவில் கொண்டு நல்லூர் கிராம மக்கள் படிப்பறிவு அற்ற, மூடநம்பிக்கையுடைய பழமை சிந்தனையுடையவர்களாகக் கருதியப் படி நல்லூரை வந்தடைகிறார். ஆனால் நல்லூர் கிராமமும், கிராம மக்களும் ஆட்சியர் நினைத்ததற்கு நேர்மாறாக விளங்கின்றனர். அதனை ஆட்சியர் நேரில் சந்தித்தப்பின் அனுபவத்தால் உணர்கிறார். நல்லூர் கிராமம் தன்னிறைவு பெற்ற சுய ஆட்சி கொண்ட கிராமமாகத் திகழ்கின்றது. அவர்களது கல்வி முறை, பொருளாதாரம், உற்பத்திச் சூழல், வழிபாட்டு முறை, உணவு முறை முதலிய அனைத்தும் இயற்கையோடு தொடர்புடையதாக விளங்குகின்றன. நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பூதங்கள் மீது பற்றுடைய பாதுகாவலர்களாக நல்லூர் மக்கள் திகழ்கின்றனர்.

ஐம்பேரியற்கை புதினத்தை இயற்கை விரும்பிகளின் கொள்கைகளைப் புலப்படுத்தும் வகையில் மாற்கு படைத்துக்காட்டியுள்ளார். இப்புதினத்தை ஆசிரியர் கதைப் போக்கில் உட்டோப்பியா எனும் 16-ஆம் நூற்றாண்டில் தாமஸ் மூரால் இங்கிலாந்தில் எழுதப்பட்ட நூலோடு தொடர்பு படுத்திக்காட்டுகிறார். அப்பதிவானது, "உட்டோப்பியான்னா? இல்லாத இடம்னு சொல்லலாம். கற்பனையான இடம்னு சொல்லலாம். கற்பனையில ஒரு தீவை உருவாக்குனார். மக்கள் வாழ்றாங்க. எந்தவிதமான வேற்றுமையும் இல்லாம தங்களுக்கான பொருளாதாம், அரசியல், கலாச்சாரம், வழிபாடு, கல்வினு உருவாக்கி வாழ்றதா எழுதியிருக்கார்"(ஐம்பேரியற்கை, 2018:311) என்பதாகும்.

இப்புதினத்தின் ஆசிரியர் இயற்கை விரும்பியாகவும் சுற்றுச்சூழல் மாசுப்பட்டைக் குறித்தும் சிந்திப்பவராகவும் திகழ்கின்றார். அதனைத் தெளிவுபடுத்தும் வகையில் இப்புதினத்தில் இடம்பெறும் உரையாடல்கள் அமைகின்றன. ஆசிரியர் இப்புதினத்தில் இடம்பெறும் உரையாடல்கள் வழி, குழந்தை வளர்ப்பு முதல் நவீன உற்பத்தி வரையிலான சமூக கட்டமைப்பின் மாற்றத்தை விவரிக்கின்றார். தற்காலச் சமூகம்

இயற்கைச் சூழலிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கும் விதத்தை விளக்குகின்றார். ஆசிரியர் இப்புதினத்தின் துவக்கம் முதல் இறுதி வரை சுற்றுச்சூழலைப் பாதிக்கும் காரணிகளை தொடர்ச்சியாக அடுக்கிச் செல்கின்றார். இவர் இப்புதினம் எழுத முற்பட்ட காரணத்தை விவரிக்கும்போது, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டி மக்கள் போராட்டம் நிகழ்த்தும் செய்தியினைக் குறித்து இப்புதினத்தின் என்னுரையில் பதிவிடுவது, "கதிராமங்கலத்தில் மீத்தேன் எரிவாயுத் திட்டம், நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் திட்டம், கூடங்குளத்தில் அணுஉலைத் திட்டம், தேனி மலைப்பகுதியில் நியூட்ரினோ திட்டம், கன்னியாகுமரி கடலோரத்தில் சரக்குப் பெட்டகத் துறைமுகத் திட்டம், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் விரிவாக்கத் திட்டம், சென்னை-சேலம் எட்டு வழிப் பசுமைச் சாலை திட்டம் போன்ற திட்டங்கள் அனைத்தையும் மக்கள் எதிர்கின்றனர். இவற்றை நிறைவேற்றும் பகுதிகளில் ஐம்பேரியற்கையின் நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபடுவதோடு சூழலும் வெப்பமயமாகிறது. அப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரமும் அழிகிறது; கொடிய நோய்களும் பரவுகின்றன. எனவே சுற்றுச்சூழலையும் வாழ்வாதாரத்தையும் உடல் நலத்தையும் பாதிக்கும் இத்திட்டங்களே வேண்டாம் என்று மக்கள் போராடுகின்றனர்"(ஐம்பேரியற்கை, 2018:10) என்பதாகும்.

மேலும் இதனைத் தொடர்ந்து, "இந்தத் திட்டங்களில் ஒன்றைக்கூட அப்பகுதி மக்கள் தங்களுக்கு வேண்டும் என்று கேட்கவில்லை. வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற போர்வையில் பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காகவும், நாட்டின் வளர்ச்சி என்ற மாயையில் அதிகார வர்க்கத்தின் வசதிக்காகவும் இத்தகைய திட்டங்களை மக்கள் மீது அரசு திணிக்கிறது. உண்மையை எவ்வளவு காலம்தான் மறைப்பது? உண்மையைப் புரிந்துகொண்ட மக்களின் உணர்வுகள் போரட்டங்களாக வெடிக்கின்றன"(ஐம்பேரியற்கை, 2018:10) என்றும் ஆசிரியர் பதிவிடுகிறார்.

**ஐம்பேரியற்கையுடன் இணைந்த வாழ்வு**

அண்மைக்காலச் சூழலில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை இயற்கைச் சூழலிலிருந்து ஒதுங்கி வாழப் பழகிவிட்டனர். மண் தரையில் தெரியாமல் பாதம் பட்டால் கூட தீண்டத்தகாத ஒன்றைத் தீண்டியதைப் போன்ற மனநிலை உருவாகிவிட்டது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பிறகு நோய் தாக்கத்தின் வீரியம் கடந்த இரண்டு ஆண்டுகள்(2020-2021) மிகுந்துக் காணப்பட்டது. கடந்த அரை நூற்றாண்டில் மருத்துவ துறையானது குறிப்பிட இயலாத அளவிற்கு உச்சகட்ட வளர்ச்சியினை எட்டியிருப்பினும் கொரோனா எனும் கிருமியைக் கட்டுப்படுத்த முடியாமல் மருத்துவர்கள் திணறியதையும் காண முடிகிறது. இதற்கு காரணம் மக்கள் இயற்கையிடமிருந்து அந்நியப்பட்டு நிற்பது.

இவ்விடத்தில் நோய்கிருமிகள் குறித்தும் நோய் எதிர்ப்புத் திறன் குறித்தும் ஐம்பேரியற்கையில் ஆசிரியர் பதிவிடுவதைப் பதிவிடுவது அவசியமாகிறது. நல்லூர் கிராமப் பெரியவர் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கும் விளக்கம் அது. அழகேசனையும் ஆட்சியரையும் கிராமத்திற்குள் பெரியவர் அழைத்து வரும்பொழுது குழந்தைகள் மண் தரையில் அமர்ந்து மண்ணோடு விளையாடிக் கொண்டிருந்தன. அதைப் பார்த்தபடி மூவரும் கடந்தனர். அதற்குப் பின்னர் பெரியவர் வீட்டில் நீர் அருந்தக் தருகையில், அழகேசன் மறுத்து சுத்திகரிக்கப்பட்ட நீரை ஆட்சியருக்கு குடிக்கக் கொடுக்கிறார். அப்போது குழந்தைகள் மண்ணில் விளையாடுவதனால் அவர்கள் பெறுகின்ற பயனைப் பெரியவர் விளக்கும் பொருண்மையில் அவ்வுரையாடல் அமைகின்றது. அவ்வுரையாடலானது, "தெருவில குழந்தைக விளையாடுறத நீங்க பார்த்தீங்க. உங்க முகம் மாறுச்சி. அத நான் கவனிச்சேன். குழந்தைக்கு நோய் வரும்னு கட்டாயம் நினைச்சிருப்பீங்க. எங்க குழந்தைகளுக்கு நோய் வராது. குழந்தைக தெருவுல விளையாடினா நோய்க்கிருமிக உடலுக்குள்ள நுழையுத்தான். ஆனா நோய எதுக்குற கிருமிக சின்ன வயசுல அதிகமா இந்தக் குழந்தைககிட்ட வளரும். அவை நோய்க் கிருமிகள அழிக்கும். எங்க குழந்தைக அதுகளுக்கேயுள்ள ஆர்வத்துல தெருவுல விளையாடுறதுனால உடல்ல நோய எதுக்கிற, அழிக்கிற கிருமிக அதிகமா இருக்கு. அதனால குழந்தைக எந்தத் தண்ணியக் குடிச்சாலும் ஒண்ணும் செய்யாது. இந்த தண்ணியத்தான் பறவைக மிருகங்க எல்லாம் குடிக்கிது. அதுகளுக்கு நோய் வருறதில்ல.

ஏன்னா இயற்கையா வாழும்போது நோய எதுக்கிற சக்தி அதிகமா வளருது. இல்லாட்டா அதுகளும் சுத்திகரிக்கப்பட்ட நீரைத்தான் குடிக்கணும். நாங்க இங்க பிளாஸ்டிக்கை முழுசுமா விலக்கியிருக்கோம். ஆனா இவர் பிளாஸ்டிக்(நெகிழி) குப்பியில தண்ணி கொண்டுவந்திருக்கார். வேடிக்கையாயிருக்கு. நீங்க சுத்திகரிக்கப்பட்ட தண்ணியக் குடிக்கிறதுல எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லனாலும் எங்க தண்ணியக் குடிக்கலங்கிற வருத்தம் இருக்கும். பரவாயில்லை. ஆனா பிளாஸ்டிக் பாட்டில இங்க போடாதீங்க"(ஐம்பேரியற்கை, 2018:54) என்பதாகும்.

மேற்கண்ட உரையாடலில் கவனிக்க வேண்டிய மற்றொரு தகவலுமுண்டு. ஆசிரியர் நெகிழி பயன்பாட்டை தவிர்க்கும் நல்லூர் கிராமத்தைப் படைத்துக் காட்டுகிறார். குண்டுருளை எழுதுகோல்களைத்(Ball point pen) தவிர்க்கும் வகையிலான நல்லூர் மக்களின் இயற்கையின் மீதான பற்றைக் காட்டுகிறார். இவைமட்டுமல்லாமல் 'குழந்தைக அதுகளுக்கேயுள்ள ஆர்வத்துல தெருவுல விளையாடுறதுனால' என்ற வாக்கியத்தின் வழி குழந்தைகளுக்குண்டான இயல்பைச் சுட்டிக்காட்டுகிறார். இதன் தொடர்ச்சியாக மற்றொரு இடத்தில் "இயல்பாகவே குழந்தைகள் ஐம்பூதங்களோட விளையாட ஆசைப்படுவாங்க. ஆனா மக்கள் அதை அனுமதிக்கிறதில்ல. பறவைகள், விலங்குகள் எல்லாம் பிறந்ததிலிருந்தே ஐம்பூதங்களோடு இணைந்து ரொம்ப இயல்பா வாழுங்க"(ஐம்பேரியற்கை, 2018:100) எனக் கூறி, உதாரணத்துக்கு மான் குட்டிக்கும் ஐம்பூதங்களுக்கும் இடையேயான தொடர்பை விவரித்தப்பின் குழந்தைகளை ஐம்பூதங்களிடமிருந்து ஒதுக்கி வைப்பதை விவரிக்கின்றார். அவற்றை ஆசிரியர்,

நிலத்திற்கும் குழந்தைக்குமிடையே தொடர்பில்லாமல் போவது குறித்து "ஒரு குழந்தை பிறக்குது. என்ன செய்றோம்? பிறந்த குழந்தைக்கும் தரைக்கும் எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாதுன்னு நினைக்கோம். வசதிக்குத் தகுந்த மாதிரி கட்டில்லயோ தொட்டில்லயோ படுக்க வைக்கோம். தரையில படுக்க வைக்கிறதில்லை. வளரும் குழந்தை முதல்ல குப்புற விழும். தரையில விழ அனுமதிக்கிறதில்லை. கட்டில்லயோ பாயிலயோ விழச் செய்றோம். பிறகு குழந்தை உக்காரும். தரையில உக்கார விடுகிறதில்லை. பாயைப் போட்டு அதுல உக்கார வைக்கோம். நடக்கும்போது காலு தரையில படாதபடி காலணிகள்" என்றும்,

காற்றுக்கும் குழந்தைக்குமிடையே தொடர்பில்லாமல் போவது குறித்து "பிறந்ததும் குழந்தைக்கு முதல்ல நாம செய்றது ஆடைகள அணிவிக்கிறதுதான். எப்பவும் ஆடைகளோட குழந்தை இருக்கும்படி கவனமாப் பாத்துக்கிடுறோம். வெளிய குழந்தையைத் தூக்கிட்டுப் போகும்போது குழந்தைக உடல்ல காற்று படாம இருக்கணும்னு நினைக்கோம். அதுக்காக துணி யால குழந்தைக உடல நல்லாச் சுத்துறோம். இப்ப அதுக்குன்னு தனியா குழந்தைக தூங்குற பை வந்திருக்கு. அதுல வச்சி பொம்மை மாதிரி தூக்கிட்டுப் போறோம். காற்று உடம்புல பட்டா நோய் வரும்னு நினைச்சே இதைச் செய்றோம். காற்று படாததாலதான் நோய் வருது" என்றும்,

நீருக்கும் குழந்தைக்குமிடையே தொடர்பில்லாமல் போவது குறித்து "குழந்தைகளுக்குத் தண்ணினா ரொம்பப் பிடிக்கும். அதுல விளையாடத் துடிக்கும். யாருமில்லைனா குழந்தை குளியலறைக்குப் போயி தண்ணியில விளையாடுறதைப் பாத்திருப் போம். ஆனா குழந்தை தண்ணியில விளையாட அனுமதிக்கிறதில்லை. மழை பெய்தா வீட்டுக்குள்ளயே குழந்தைகளை தடுத்து வைக்கிறோம்" என்றும்,

நெருப்பிற்கும்(சூரியனுக்கும்) குழந்தைக்குமிடையே தொடர்பில்லாமல் போவது குறித்து "வெளியில் சுதந்திரமா குழந்தை விளையாட விரும்பும். ஆனா வெயில்ல விளையாட அனுமதிக்கிறதில்லை. வெயில் பட்டா பிள்ளை கருத்துப்போகும்னு நினைக்கோம். வீட்டுக்குள்ளகூட விளையாட அனுமதிக்கிறதில்லை. பொருள்களை உடைச்சிரும்னு நினைச்சி அமைதியா இருக்கச் சொல்றோம். ஒருசில சமயங்கள்ல குழந்தைகளக் கட்டில்காலோடு கட்டிப் போடுறோம். வெயிலோடு தொடர்பே இல்லாம பிள்ளை வளருது" என்றும்,

வெளியிற்கும்(ஆகாயத்திற்கும்) குழந்தைக்குமிடையே தொடர்பில்லாமல் போவது குறித்து "இரவுல ஆகாயம் ரொம்ப அழகா இருக்கும். வானத்துல வெவ்வேறு

வடிவங்கள் வெண்மேகம் உலவும், வெண்ணிலா பவனி வரும். நட்சத்திரம் கண்சிமிட்டும். குழந்தை வெளிய போய் இரவின் அழகை ரசிக்க விரும்பும். அதையும் அனுமதிக்கிறதில்லை. இருட்டுல போனா பூச்சாண்டி பிடிச்சிட்டுப் போயிருவான்னு சொல்லி பயமுறுத்துறோம். குழந்தைக்கு ஆகாயத்தோட உறவே இல்லாமப் போகுது. இருட்டக் கண்டா பயத்தோடவே வாழுது'' என்றும் சுட்டிக்காட்டுகிறார்(ஐம்பேரியற்கை, 2018:101,102).

**இயற்கையோடிணைந்த கட்டுமான மற்றும் கைவினைப் பொருள்கள்**

நல்லூர் கிராமத்திலிருந்த மூன்று தெருக்களிலும் வெவ்வேறு வடிவங்களில் கட்டமைக்கப்பட்ட குடிசைகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. அவைகளின் கூரைகள் பனை ஓலைகளாலும் தர்ப்பைப் புற்களாலும் பின்னப்பட்டிருந்தன. அவைகளில் சில வீடுகளுக்குப் பனைமரச் சட்டங்கள் வைத்தும் பல வீடுகள் மூங்கில்களை வைத்தும் கட்டப்பட்டிருந்தன. மூங்கிலைக் காட்டிலும் பனைமரம் உறுதியானவைதான். இருப்பினும் நல்லூர் மக்கள் பனைமரக் கட்டைகளைப் பெரிதும் பயன்படுத்துவதில்லை. அதனை ஆசிரியர் பின்வருமாறு பதிவிடுகிறார். "பனை வளரப் பல வருசம் ஆகும். அதனால அதை வெட்டுறதில்ல. அதுக்குப் பதிலா மூங்கில்களைத்தான் பயன்படுத்துறோம். மூங்கில் புதர்க இங்க அதிகம் இருக்கு"(ஐம்பேரியற்கை, 2018:24). இயற்கைத் தாவரங்களிலிருந்து பெற்றப் பொருட்களால் அமைக்கப்பட்ட இக்குடிசைகள் குளுமையானது என்றும் சிமெண்ட மற்றும் இரும்புகளைக் கொண்டு கட்டப்படும் வீடுகள் அதிகப்படியான அனலை அளிக்கின்றன என்றும் ஆசிரியர் மொழிகிறார். மேலும் சிமெண்ட்டு ஆலைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீங்குகளையும் இப்புதினத்தில் எடுத்துரைக்கிறார். அதுவானது, "ஆட்சியரின் நண்பருக்கு தமிழகத்தில் ஒரு மாவட்டதில் உதவி ஆட்சியர் பதவி கிடைத்தது. அவர் பணிபுரிந்த இடத்தில் ஒரு சிமெண்ட் ஆலை இருந்தது. அந்த ஆலையால் தங்களது நிலமும் உடல்நலமும் சுற்றுச்சூழலும் பெரிதும் பாதிக்கப்படுவதாக அப்பகுதியில் வாழ்ந்த விவசாயிகளும் கிராமத்தினரும் அவரிடம் மனு கொடுத்தனர் மனுவின் அடிப்படையில் அந்த ஆலையை ஆராய்ந்தார். தனியாருக்குச் சொந்தமான ஆலை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கி அதிலிருந்து சிமெண்டுக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களைத் தோண்டி எடுத்தனர். மீதமுள்ள மண்ணையும், நீலப்பாறைக் கற்களையும் மலைபோல் குவித்து வைத்திருந்தனர். தோண்டப்பட்ட நிலம் விவசாயத்திற்கோ அல்லது வேறு எதற்குமோ பயன்படவில்லை. எடுத்த சுண்ணாம்புக்கற்களை ஆலைகளில் உள்ள உலைகளில் போட்டு எரித்துச் சிமெண்ட் தயாரித்தனர். எரிக்கும்போது ஆலையிலிருந்து வெளியேறிய புகையோடு சிமெண்ட் துகள்களும் அதிகம் கலந்திருந்தன. ஆலையைச் சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சிமெண்ட் துகள்கள் விழுந்தன. அவை விளைச்சலைப் பாதித்ததோடு நிலத்தையும், சுற்றுச்சூழலையும் அதிகம் கெடுத்தன. சிமெண்ட் துகள்களைச் சுவாசித்த அப்பகுதியினருக்குப் புற்றுநோய், காசநோய் போன்ற கொடிய வியாதிகளும் வந்தன'' (ஐம்பேரியற்கை, 2018:24) என்பதாகும்.

தற்கால சூழலில் இது போன்ற செய்திகள் அன்றாட வாழ்க்கையில் ஒரு அங்கமாகவே மாறிவிட்டன. அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி எஸ். கைலாசபுரம் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில், தனியார் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூர் அருகே உள்ள எஸ் கைலாசபுரம் கிராமத்தில் தனியார் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கைலாசபுரம், சவரிமங்கலம், கொம்பாடி, தலவாய்புரம் உள்ளிட்ட கிராம மக்கள் தொடர் எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளனர். தனியார் சிமெண்ட் தொழிற்சாலை அமைந்தால் தங்கள் கிராம மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில் கைலாசபுரம் பஞ்சாயத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கைலாசபுரம், சவரிமங்கலம், கொம்பாடி, தளவாய்புரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தனியார் சிமெண்ட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏகமனதாகத் தீர்மானம் கொண்டுவந்துள்ளனர். இதையடுத்து

பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து அதிகாரிகள் கிராமசபை கூட்டத்தில் பொதுமக்களின் கருத்தைப் பதிவேட்டில் பதிவு செய்து கிராமசபை கூட்டத்தில் தனியார் சிமெண்டு தொழிற்சாலைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது(டியூட்டி ஆன்லைன், 2 அக்டோபர் 2021).

பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து கைவினைப் பொருள்கள் தயாரிக்கும் கலை நல்லூர் கிராம மக்களிடம் இருந்தது. அவர்கள் செய்த கைவினைப் பொருள்களை ஆசிரியர் *"ஓலைகளை வச்சி பெட்டிக செஞ்சாங்க. மட்டைகள்ல இருந்து நாரை உரிச்சு பதநிப் பெட்டிகள உருவாக்குனாங்க"(ஐம்பேரியற்கை, 2018:209).* மேலும் *"சுளகு, பெட்டி, கூடை, தொப்பி, கைப்பைனு விதவிதமான கைவினைப் பொருள்களையும் உருவாக்குனாங்க. கட்டில்கள்ல பனைநாரைப் பின்னி நார்க் கட்டில் செஞ்சாங்க"(ஐம்பேரியற்கை, 2018:210)* என எடுத்துரைக்கிறார்.

ஐம்பேரியற்கையில் ஆசிரியர் கிராம சபைகளுக்குரிய அதிகாரம் குறித்த தகவல்களை நிகழ்வுலகப் பதிவுகளோடு பதிவிடுகிறார். சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்ற நிறுவனங்கள் கிராம சபைகள் தீர்மானத்தின் பெயரில் நீதிமன்றம் மூட உத்திரவிட்டுள்ளது. அவை,

- *"ஒடிசா மாநிலத்தில நியாமகிரி மலையில பாக்ஸைட் அதிகம். அதை வெட்டி எடுத்து சுத்திகரிக்க லஞ்சிகார்க் என்ற இடத்துல ஆலை அமைக்க வேதாந்தா நிறுவனத்துக்கு அரசு ஒப்புதல் அளிச்சது. அப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களின் போராட்டத்தையும் எதிப்பையும் மீறி ஆலை அமைக்கப்பட, சுற்றுச்சூழல் அதிகம் பாதிக்கப்பட்டது. பல்வேறு போராட்டங்களை நடத்திய பழங்குடி மக்கள் இறுதியாக 2013-ம் ஆண்டு சுதந்திரதினத்தன்று தங்களது 12 கிராமசபைகளிலும் ஆலைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றினாங்க. அதை அங்கீகரித்த உச்ச நீதிமன்றம் மலையில பாக்ஸைட் வெட்டியெடுப்பதையும், ஆலையையும் உடனே மூட உத்திரவிட்டது"(ஐம்பேரியற்கை, 2018:247),*
- *"கேரளாவில் பிலாச்சிமடாவில கோகோ கோலா நிறுவனம் 1998-ல ஆலை அமைச்சது. அதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததோட ஆலைக் கழிவால் குடிநீரிலும் நச்சு கலந்தது. அப்பகுதி மக்கள் ஆலைக்கு எதிராகப் போராடியதோடு கிராமசபைகள் தீர்மானமும் நிறைவேற்றினாங்க. கிராமசபைகளின் தீர்மானத்தின்படி ஆலையை மூட 2004-ல் நீதிமன்றம் உத்திரவிட்டது"(ஐம்பேரியற்கை, 2018:248)* என்பனவாகும்.

ஒரு லிட்டர் கொக்கோ கோலா பானம் தயாரிக்கும் போது ஆலைகளிலிருந்து ஏழு லிட்டர் கழிவு நீர் வெளியேறுகின்றது. வெளியேறும் ஒவ்வொரு லிட்டர் கழிவு நீர் எட்டு லிட்டர் நிலத்தடி நீரை மாசுறுத்துகின்றன. ஒவ்வொரு லிட்டர் பானமும் 56 லிட்டர் குடி நீரை அசுத்தப்படுத்துகின்றன. இதற்கு கேரளாவின் பிளாச்சிமடா ஒரு உதாரணம். கேரளாவின் நெற்களஞ்சியம் என வர்ணிக்கப்படும் பிளாச்சிமடா பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது. இது மிகவும் செழிப்பான கிராமம். அங்கு 2000-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவிலேயே மிகப் பெரிதாகத் தனது ஆலையை அமைத்தது கொக்கோ கோலா நிறுவனம். ஆழ்குழாய்க் கிணறுகளின் வழி தினமும் 15 இலட்சம் லிட்டர் நீரை உறிஞ்சியது. இரண்டு வருடங்களுக்குள் அப்பகுதியில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் குறைந்துவிட்டது. மீதமிருக்கும் நீரையும் குடிக்க இயலாதவாறு ஆலைக்கழிவுகள் பாழ்படுத்தியுள்ளது. வறட்சி என்பதை வரலாற்றில் சந்தித்திராத பிளாச்சிமடா மக்கள் இப்போது நல்ல குடிநீருக்காகப் போராடி வருகிறார்கள்.

நீர், நிலம் காடு இவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று நடைபெறுகின்ற மக்களுடைய போராட்டங்கள் பல வெற்றியைக் கண்டிருக்கின்றன. ஒடிசாவில் நியாமகிரி என்ற இடத்தில் வேதாந்தா நிறுவனம் நிலத்தை கையகப்படுத்தி அங்கு கனிம வளத்தை எடுக்க முயற்சி செய்தது. உச்சநீதிமன்றத்துக்கு இந்த வழக்கு சென்ற பொழுது, இதைக் குறித்து தீர்ப்புக் கூற வேண்டியது அந்த பகுதி கிராம மக்கள். எனவே அவர்களிடம் சென்று கேளுங்கள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த மக்கள் வேதாந்தா தொழிற்சாலை

எங்களுக்குத் தேவையில்லை என்று தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள்(நிலமெனும் நல்லாள் நகும், 2016:48).

**இயற்கையின் உணவுச்சங்கிலி முறை**

ஐம்பேரியற்கை புதினத்தில் நல்லூரைக் கண்காணிக்க சென்றிருந்த ஆட்சியர், அங்கு பாப்பம்மா என்கின்ற குழந்தை வரைந்த ஓவியத்தைக் குறித்து அவளிடம் வினாவுகிறார். மாட்டுக்கு ஒரு திமில் தானே இருக்கும். நீ இரண்டு திமில்கள் வரைந்துள்ளாய் என்று கேட்டார். அதற்குக் குழந்தை அது திமிலல்ல கருமன்(கரிச்சான் குருவி) என்று கூறியது. ஆட்சியரை அழைத்துச் சென்று ஓவியத்தில் உள்ள காட்சியை நேரில் காட்டினாள் பாப்பம்மா. அந்த கருமன் குருவி மாட்டின் மீது அமர்வதும் பறப்பதுமாகத் தொடர்ந்து செய்துக்கொண்டிருந்தது. அதற்கான காரணத்தை ஆட்சியர் கேட்க, குழந்தை பாப்பம்மா பின்வருமாறு பதிலளிக்கின்றாள். "நீங்க பெரிய ஆளா இருக்கீங்க. நீங்கதான் எனக்குச் சொல்லிக்கொடுக்கணும். ஆனா நானு உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கேன். நல்லாப் பாருங்க. மாடு மேயுதா. மேஞ்சுக்கிட்டே நடக்குதா. அப்ப புல்லுல மறைஞ்சிருக்கிற விட்டில் பூச்சிக மாடு மிதிச்சிருமேன்னு பயந்து பறக்குதா. அதைப் பாத்ததும் குருவி பறந்து போயி கவ்வி ஒரே முழுங்கா முழுங்குதா. முழுங்கிட்டு மறுபடியும் பூச்சிய முழுங்க மாடு மேல உக்காருதா"(ஐம்பேரியற்கை, 2018:80) என்றாள். இது மேய்ச்சல் நிலத்தின் ஒரு வகை உணவுச்சங்கிலி முறையாகும்.

பூமியிலுள்ள அனைத்து உயிர்களும் எதேனும் ஒரு வகையில் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. தாவர உண்ணிகள் உயிர் வாழ தாவரங்கள் தேவைப்படுகின்றன. ஊன் உண்ணிகள் உயிர் வாழ தாவர உண்ணிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறாக நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஒவ்வொரு உயிரினங்களும் ஒவ்வொரு உயிரினங்களைச் சார்ந்துள்ளன. இதனை ஆசிரியர் இப்புதினத்தில் பெரியவருக்கும் ஆட்சியருக்கும் இடையே நிகந்த உரையாடலின் வழி விவரிக்கிறார். உணவுச்சங்கிலியின் சமநிலை குறித்தும், அவற்றின் சமநிலை தவறுவதால் ஏறபடும் விளைவுகள் குறித்தும் விவரிக்கும் உரையாடல், பெரியவரும் ஆட்சியரும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களைப் பின் தொடர்ந்து வந்த நாயொன்று முயலைக் கண்டதும் வேட்டைக்குத் தயாராகி பாய்ந்தது. முயல் நாயிடமிருந்து தப்பித்து புதருக்குள் சென்று மறைந்தது. இதனைக் கண்ட பெரியவர் ஆட்சியரிடம் உணவுச்சங்கிலியின் சமநிலை குறித்து, "நாயையும் முயலையும் பார்த்தோம். நாயும் வாழனும். முயலும் வாழனும். ஆனா நாய்க்கு முயல் போன்ற சிறு விலங்குகள்தான் உணவு. இப்ப இந்த முயல் தப்பியிருச்சி. அதுக்காக நாய் பட்டினியா இருக்கிறதில்லை. வேற முயலையோ அல்லது வேற ஏதோ விலங்கையோ பறவையையோ வேட்டையாடத்தான் போகுது. அதுக்காக நாய்கள் வேட்டையாடித் தின்னும் இனங்கள் முழுசுமா அழியிறதில்லை. இயற்கையின் ரகசியம் என்னன்னா அந்த எண்ணிக்கை என்னைக்குமே குறையிறதில்லை. இன்னைக்கு ரெண்டு முயல்களை நாய்கள் தின்னுருச்சுன்னா ரெண்டு முயல் குட்டிக பிறந்திருக்கும். இது ஒரு உணவுச் சங்கிலி தொடர். நிலத்துல சின்னச் சின்ன உயிரினங்கள் இருக்கு. அதை நிலத்துல இருக்கிற புழுக்கள் உண்ணுது. புழுக்களைத் தவளைகள் பிடிச்சித் தின்னுது. தவளைகளை பாம்பு விழுங்குது. பாம்புகளைத் தூக்கிப்போயி கழுகு தின்னுது. ஆனாலும் அந்தந்த இனத்தின் எண்ணிக்கை மாறாம இருக்கு. சொல்லப்போனா கூடிக்கிட்டே போகுது. இதுதான் இயற்கையின் நியதி. இப்ப நாம எங்கயாவது பாம்பப் பாத்தாக் கொல்றோம். பாம்புக இனம் கொஞ்சங் கொஞ்சமா அழியிது. அப்ப என்ன ஆகும்? தவளைக எண்ணிக்கை கூடும். எங்கயும் தவளைக எண்ணிக்கை கூடும். எங்கயும் தவளைகதான் இருக்கும். உயிரினங்களுக்கு அதனுடைய உணவு எதுவோ அதை உண்ணுதுங்க. நாமளும் வேட்டையாடித் தின்னவுங்கதான். நம்ம இயற்கையான உணவு அசைவம்தான். அதோட காட்டுல உள்ள பழங்கள் கிழங்குகளத் தின்னும் உயிர் வாழ்ந்தோம். பிறகு தான் விவசாயம் செய்ய ஆரம்பிச்சோம். கொல்லாமையை வலியுறுத்திய சமணரும் பவுத்தரும்தான் சைவ உணவுதான் நமக்கு ஏத்ததுன்னு பிற்காலத்துல சொல்ல ஆரம்பிச்சாங்க. அதோட சைவம்தான் உயர்ந்தது, அசைவம் தாழ்ந்ததுன்னும் சாதியோட இணைச்சி ஆதிக்கச் சாதியினர் சொல்ல ஆரம்பிச்சாங்க. தங்கள உயர்த்திக்கொள்ள சைவத்துக்கு பார்ப்பனர்கள், அதுபோல நிறையப் பேர் மாறுனாங்க. எங்ககிட்ட அந்தக் கேள்வியே எழுறதில்ல. எங்களுக்கு மாட்டுக்கறி வேணுமா? மாட்டை அடிச்சு எல்லாரும்

*பகிர்ந்து சாப்பிடுவோம். அது மாதிரிதான் ஆடு கோழி பன்னிகளையும் திங்கிறோம். ஆனா நாங்க ஒரு விசயத்துல கவனமா இருக்கோம். அதனுடைய எண்ணிக்கை குறையாமல் பாத்துக்கிடுறோம். உங்களுக்கு ஒரு விசயம் சொல்றேன். அரசாங்கம் தடை செஞ்சிருக்கும் சில காட்டு விலங்குகளையும் நாங்க கொன்னு தின்போம்"(ஐம்பேரியற்கை, 2018:152) என்பதாகும்.*

*இவ்வாறாக, ஆட்சியர் மற்றும் பெரியவருக்கிடையே நடந்த உரையாடலின் போது ஆட்சியரிடமிருந்து கேள்வி ஒன்று எழுகிறது. "நீங்க சொல்றதை ஏத்துக்கிட முடியல. எல்லாமே உயிரினங்கள்னு சொல்லுற நீங்களும் உயிர்களை உணவுக்காகக் கொல்றீங்களே? இப்பக் காட்டுப்பன்னிகளைக் கண்ணி வச்சிப் பிடிச்சி சாப்படுறீங்க. பன்னி உயிரினம் இல்லையா? அதுகளுக்கு வாழும் உரிமை இல்லையா?"(ஐம்பேரியற்கை, 2018:160) என்கிறார்.*

*இக்கேள்விக்குப் பெரியவர் "நல்ல கேள்வி. ஆனா உணவுச் சங்கிலி முறையைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கோம். திரும்பவும் கேக்கீங்க. உணவு சங்கிலி முறையால எந்த உயிரினமும் முற்றிலும் அழிகிறதில்ல. உயிரினங்களின் சமத்துவம் காக்கப்படுது. ஆனா மனிதன் உயர்ந்தவன்னு சொல்லுற நீங்கதான் உயிரினங்களை முற்றிலுமா அழிக்கீங்க. மகிழ்ச்சிக்காக வேட்டைக்குப் போயி உயிரினங்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்றீங்க. யானைகளைத் தந்தத்துக்காகக் கொல்றீங்க. தந்தங்கள் எதுக்கு? அதனால என்ன உபயோகம்? அதை வச்சிருந்தா பெருமைன்னு நினைக்கீங்க. வீண் பெருமைக்காக ஒரு மிகப்பெரிய உயிரினத்தையே அழிக்கீங்க"(ஐம்பேரியற்கை, 2018:160) எனப் பதிலளிக்கிறார்.*

*இயற்கையாக நிகழும் உணவுச்சங்கிலி முறை இயல்பானது. இயற்கைச் சூழலில் மாற்றமில்லாமல் பெறும் வளர்ச்சிதான் உண்மையான வளர்ச்சி. ஆறறிவையுடைய மனிதன்தான் ஐம்பூதங்களை மாசுபடுத்துகின்றான். ஐம்பூதங்களின்றியும் உயிரினங்களின் சமநிலையின்றியும் இவ்வுலகம் இயல்பாக இயங்காது. மனிதர்கள் தங்களது இன்பத்திற்காக உயிரினங்களை வேட்டையாடுவது; சுய இலாபத்திற்காக இயற்கை வளங்களை அழிப்பதென மேற்கூறியதற்குண்டான அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள். தந்தத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் யானை போன்ற உயிரினங்களை வேட்டையாடுவது; காடுகளை அழித்து இலாபம் ஈட்டக்கூடிய உற்பத்தி முறைகளுள் ஈடுபடுவதென மனிதன் இயற்கையின் வளங்களை சுரண்டுகின்றான் என ஆசிரியர் இப்புதினத்தின் வழி விளக்குகிறார்.*

**வேளாண் புரட்சிகளும் இயற்கையும்**

*1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட வேளாண் புரட்சிகள் குறித்தும் ஐம்பேரியற்கையில் ஆசிரியர் பதிவிடுகிறார். இந்தியா சுதந்திரம் பெற்றப்பின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண இரஷ்யாவின் ஐந்தாண்டு திட்ட முறையினைப் பின்பற்றியது. இதுவரை பதிரெண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவுப்பெற்றுள்ளன. இந்தியாவின் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் முதன்மை நோக்கமாக வேளாண் துறையின் முன்னேற்றம் இடம்பெற்றிருந்தது. வேளாண் துறையின் வளர்ச்சி என்பது மூன்றாம் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து துவங்குகின்றது. இதனைப் பசுமைப் புரட்சி என்று சுட்டுவர். வீரிய ஒட்டு விதைகள், மேம்பட்ட உரவகைகள், மேம்பட்ட வேளாண்மை செயல்முறைகள் மற்றும் நீர்ப்பாசன வளர்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைந்த பயன்பாட்டால் வேளாண்மை மேம்படுத்தப்பட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது பசுமைப் புரட்சியின் நோக்கமாகும். எண்ணெய் வித்துக்களுக்காக மஞ்சள் புரட்சியும்; மீன்களுக்காக நீலப் புரட்சியும்; தோல் பொருள்களுக்காக பழுப்புப் புரட்சியும்; சணலுக்காக தங்க நூலிழைப் புரட்சியும்; பழங்கள், தேன் மற்றும் தோட்டக் கலைப் பயிர்களுக்காக பொன் புரட்சியும்; உரங்களுக்காக சாம்பல் புரட்சியும்; வெங்காயம், மருத்துவப் பொருள்கள், இறால் போன்ற உற்பத்திக்காக இளஞ்சிவப்புப் புரட்சியும்; முட்டை மற்றும் கோழிகளுக்காக வெள்ளிப் புரட்சியும்; பருத்திக்காக வெள்ளி இழைப் புரட்சியும்; இறைச்சி மற்றும் தக்காளிக்காக சிவப்புப் புரட்சியும்; உருளைக்கிழங்கிற்காக வட்டப் புரட்சியும்; பால் உற்பத்திக்காக வெண்மைப் புரட்சியும் எனப் பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து இந்தியாவில் வேளாண் துறையின் வளர்ச்சிக்காக*

*பல புரட்சிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவைகள் கால காலமாய் இருந்த இயற்கையான உற்பத்திச் சூழலிலிருந்து எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதனை, "இயற்கை உரம் போடாம ரசாயன உரம் போடுறீங்க. விளைச்சல் அதிகமா கெடைக்கு. உண்மைதான். ஆனா உத்தியாகும் உணவுப் பொருள்கள்ல பூச்சிமருந்து கலந்திருக்கு. விசத்தைத்தான் சாப்பிடுறீங்க. ரசாயன உரம் போடுறதுனால மண்ணுல உள்ள மண்புழு உட்பட விவசாயத்துக்குப் பயன்படும் நல்ல கிருமிகள், புழுபூச்சிகள் எல்லாம் கொல்லப்படுது. மண்ணும் மலடா மாறுது. மாடுகளுக்கும் செயற்கைத் தீனியைக் கொடுக்கீங்க. அதுக நடக்கக்கூட முடியாமக் கெடக்குதுக. ஆரோக்கியமா வாழல. அதுக கொடுக்கிற பாலும் சத்தானதில்ல. அந்தப் பாலத்தான் குடிக்கீங்க. உங்க உடல் நலத்தத்தான் கெடுக்கீங்க"(ஐம்பேரியற்கை, 2018:94) எனக் கூறுகிறார் ஆசிரியர்.*

***முடிவுரை***

*இயற்கையாக நிகழும் உணவுச் சங்கிலி முறை இயல்பானது. மனிதர்கள் தங்களது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எண்ணற்ற வழிமுறைகளைக் கையாள்கிறார்கள். ஆறறிவைக் கொண்டு இயற்கையை அழிக்கிறார்கள். உயிரினங்களில் உயர்வு தாழ்வு கிடையாது. அந்த வித்தியாசத்தை மனிதர்கள்தான் காண்கின்றார்கள். தங்களின் சுய நலனுக்காக சூழலியல் காரணிகளான மற்ற உயிரினங்களின் வாழ்விடங்களைப் பறிக்கின்றனர். சில வேளையில் பிற உயிரினங்களைச் சிறைபிடிக்கவும் கொல்லவும் செய்கிறார்கள். இவ்வுலகில் உயிரினங்களின் சமநிலை தவறினால் மனிதர்கள் உயிர்வாழ முடியாது. இயற்கையை அழிக்காமல் அதன் ஆற்றலைப் பயன்படுத்தி காணும் வளர்ச்சி என்றும் நிலைத்து நிற்கும். ஆகையால் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து உயர்வோம் என வலியுறுத்துவதாக ஐம்பேரியற்கை புதினத்தை மாற்கு படைத்துக் காட்டியுள்ளார்.*

***துணை நூற்பட்டியல்***


1. *சுகிர்தா பஸ்மத். ச., சுற்றுச்சூழல் கல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., 2020.*
2. *சுசிலா அப்பாத்துரை, சுற்றுச்சூழல் கல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2019.*
3. *பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-608001, 2016.*
4. *மாற்கு, ஐம்பேரியற்கை, தமிழினி பதிப்பகம், சென்னை-600051, 2018.*
5. *ராஜா. ஜி., லிவிங்ஸ்டன். சி., லிவின் தேவசகாயம். எச்., சுற்றுச்சூழல் கல்வி, நியூ ஏஜ் இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், 2005.*
6. *டியூட்டி ஆன்லைன், 2 அக்டோபர் 2021. (http://tutyonline.net/view/31_211717/20211002170659.html)*
7. *ஜீவானந்தம் வெ., நிலமெனும் நல்லாள் நகும், எதிர் வெளியீடு, பொள்ளாட்சி, 2016.*